


தென்காசி தொகுதி,சுரண்டை நகர செயலாளர் ஏ.ஜி.கணேசன் ஏற்பாட்டில், தென்காசி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் அவர்களை ஆதரித்து மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் தெருமுனை கூட்டம் வாயிலாக கழக அரசின் சாதனைகளை கூறி வாக்கு சேகரித்தார்.





இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தெற்கு ஒன்றியம் நவ்லாக் அவரக்கரை பகுதியிலிருந்து த.வெ.க.மற்றும் அதிமுக வில் இருந்து 50க்கும் மேற்பட்ட நபர்கள் த.வெ.க.அர்ஜினன் தலைமையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் வெற்றி வேட்பாளர் ஆர்.காந்தி முன்னிலையில் திமுகவில் இணைந்தார்கள் அவர்கள் அனைவருக்கும் கருப்பு சிகப்பு வேட்டி அணிவித்து வரவேற்றார் இதில் ஒன்றிய செயலாளர் T.C.பத்மநாபன் சரஸ்வதி ரவிச்சந்திரன் கிளை செயலாளர் சுதாகர் காமாட்சி மாவட்ட பிரிதிநிதி சத்தியமூர்த்தி சூர்யா மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### வஞ்சகமான – தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த

# எதிர்க்கட்சியினரை பெண்களுக்கு எதிரானவர்கள் என சித்தரிக்க மோடி முயற்சி!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா அறிக்கை!

**புதுடெல்லி, ஏப். 20-**

**தங்கள் நோக்கங்கள் நிறை வேறுவதற்காக எத்தகைய குறுக்குவழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.**



மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமரான மோடி, முன்எப்போதும் இல்லாத வகையில், எதிர்க்கட்சிகள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட தாக்குதலை தொடுக்கும் வகையில் ஒரு தேசிய உரையை தொலைக்காட்சியில் நிகழ்த்தியுள்ளதாக கூறியுள்ளார்.

ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஒரு பின்னடைவாக அமைந்த ஜனநாயக வாக்களிப்பு செயல்முறையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, மக்களவை வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வியின் மீதான தனது சகிப்புத்தன்மையின்மையையே பிரதமரின் உரை வெளிப்படுத்துவதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார்.

தொகுதி மறுவரையறை மற்றும் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு ஆகிய இரண்டு அரசியலமைப்பு திருத்தங்களையும் ஒன்றாக இணைக்கும் வஞ்சகமான மற்றும் தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த அனைத்து எதிர்க்கட்சிகளையும், பெண்களுக்கு எதிரானவர்கள் என்று சித்தரிக்க பிரதமர் மோடி முயன்றுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவையில் ஆளும் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததால், இந்த மசோதா வாக்கெடுப்பில் தோல்வியடையும் என்பதை நன்கு அறிந்திருந்தும், எதிர்த்து வாக்களிப்பவர்களைக் குறை கூறுவதற்காகவே மோடி அரசு இவ்வாறு செய்துள்ளதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார். தங்கள் நோக்கங்கள் நிறை வேறுவதற்காக எத்தகைய குறுக்குவழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக திருச்சி சிவா தெரிவித்துள்ளார். இது பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைந்துள்ளதாகவும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் மட்டுமே கடந்த 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது என்பதை மோடியால் புறந்தள்ளிவிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பதை பிரதமர் மோடிக்கு நினைவூட்டுவதாகவும் திருச்சி சிவா குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தற்போதைய ஆட்சியில்தான், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 40 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதும் பிரதமருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் திருச்சி சிவா கூறியுள்ளார்.

மேலும், காவல்துறையில் பெண்களை பணியில் அமர்த்தியதும் திமுக ஆட்சியில்தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேநேரம், இந்தியாவில் 20 மாநிலங்களில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வில், டெல்லியில் மட்டும்தான், ஒரேயொரு பெண் முதலமைச்சர் உள்ளதாகவும், அதுவும் டெல்லியில் பெண் அமைச்சர்கள் யாரும் இல்லை என்பதை பிரதமர் மோடி வசதியாக மறந்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் எதிர்க்கட்சிகள் பெண்களின் நலனுக்கு ஆதரவாக செயல்படுவதில்லை என்று குற்றம் சாட்டுவதற்கான நம்பகத்தன்மை மோடியிடம் துளிக்கூட இல்லை என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சியினரை நோக்கி ஒரு விரலை நீட்டும்போது, மற்ற மூன்று விரல்கள் தங்களை நோக்கி காட்டுகின்றன என்பதை பிரதமர் மோடி மறந்துவிடக்கூடாது என, மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை! சுரண்டையில்

# தென்காசி கழக வேட்பாளர் மரு.கலை கதிரவனை ஆதரித்து அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வாக்கு சேகரிப்பு!

## க. அன்பகம்கலை–பொ. சிவபத்மநாதன்–பழனிநாடார்எம்.எல்.ஏ.முன்னிலை!

தென்காசி.ஏப்.20-

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகு திக்கு உட்பட்ட சுரண்டை

பொட்டல் மாடசாமி கோவில் தெருவில் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவனுக்கு வாக்கு சேகரிக்கும் நிகழ்வு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர பொறுப்பாளர் கணேசன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பங்கேற்று சுரண்டை பொட்டல் மாடசாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பேசியதாவது.

இங்கு வேட்பாளராக நிற்கும் மருத்துவர் கலை கதிரவன்,தந்தை அன்பகம் கலை அவர்கள் கழகத் தலைவர் அவர்களுடன் 50 ஆண்டு காலம் நெருக்கமாக பழகி வருகிறவர் ஆவார். உங்களுக்கு நல்ல வேட்பாளர் கிடைத்து ள்ளார். அவரை நீங்கள் அதிகமான வாக்கு வித்தி யாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.நான் தொடர்ந்து திருச்செந்தூர் தொகுதியில் 6 முறை வெற்றி பெற்றுள்ளேன்.முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

தற்போது தேர்தல் அறிக்கையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 2000 ம் ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும்,ரூபாய் 8000 மதிப்பில் இல்லத்தரசி கூப்பன் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார் கள்.

உங்கள் வேட்பாளர் கலை கதிரவன் மருத்துவர்,நல்லவர்,எல்லாரிடமும் அன்பாக பழகக் கூடியவர். இங்கே கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் நிற்பதாக நினைத்துக் கொண்டு நீங்கள் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் கலை கதிரவனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இது சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது.முழு அளவிலான வாக்குகளை பதிவு செய்ய வேண்டும். ஆகவே நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து அமோகமான வெற்றியை பெற்றுத் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பேசினார்.

# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எரித்தது காகிதத்தை அல்ல ! காவிகளின் கருணையற்ற கார்ப்பரேட் ஏகாதிபத்தியத்தை!

சாய்ந்தது சர்வாதிகாரத் தீ! சரிந்தது சாகச தீ! மரித்தது அதிகார தீ ! எரிந்தது ஆணவத் தீ ! தோற்றது மதவாதத் தீ ! பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட தமிழ்நாட்டின் செங்கோல் உயிர்த்தது !

அம்மையார் இதே பாராளுமன்றத்தில் தமிழ் பிச்சை எடுக்க கூட உதவாது என்றார் ! அறச்சொல் தோற்றது ! தமிழ் வென்றது ! ஒற்றுமையின் பலம் என்னவென்று பாராளுமன்றத்தில் நிரூபணம் ஆனது !

ராமர் கோவில் கட்டி முடிந்ததும் அதே தொகுதியில் தாமரை தோற்றது ! நேற்று பாராளுமன்றத்தில் காவி தோற்றது ! இனி நாடெங்கும் ஆன்மீக அரசியல் தோற்கும்!

சமயம் வெல்லும் , சம நீதி வெல்லும் , தமிழ்நாட்டு “திராவிட மாடல்” பாரத அரசியலாக மாறும் ! பெரியாரின் பேரன் தளபதி ஸ்டாலின் அடிக்கல் அமைப்பார். வாழ்க மாநில சுயாட்சி ! வளர்க மத்தியில் கூட்டாட்சி !



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்



கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்களின் ஆதரவு பெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் டாக்டர் பொன் கௌதம்சிகாமணி அவர்கள் திருக்கோவிலூர் நகரம், பேருந்து நிலையம் அருகில் உள்ள தேவாலயத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். நிகழ்ச்சியில் டி. என்.முருகன், கோபிகிருஷ்ணன், குணா, சரவணன், வெங்கட், சரவணன், மகாலிங்கம், ராஜா, கோல்டு ரவி, அண்ணாதுரை, ஜெகன், ராகவன், நகர மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டாண்ட் செல்வா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### “மக்களவையில் தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோற்கடிப்பு!

# நாமக்கலில் தொடங்கிய போராட்டம் வெற்றி” பட்டாசு வெடித்து கொண்டாட்டம்!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. – பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், ஏப். 20 –

நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு சட்ட மசோதா, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டது மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி தத்துவத்திற்கு கிடைத்த வெற்றியாகும் என நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே. ஆர்.என். இராஜேஸகுமார் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 16ஆம் தேதி நாமக்கல் வந்திருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கருப்பு சட்டை அணிந்து தொகுதி மறு சீரமைப்புக்கு எதிராக தமிழ்நாட்டில் முதன் முதலாக நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள என் கே செல்லப்பன் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டு இருந்த கொடிக் கம்பத்தில் கருப்பு கொடி ஏற்றினார்= 16ஆம் தேதி காலை ஏற்றிய கருப்புக்கொடி 17ஆம் தேதி நடைபெற்ற மக்களவையில் தோற்கடிக்கப்பட்டது

இதை எடுத்து முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்த கருப்புக்கொடியை கே.ஆர்.என். இராஜேஸகுமார் எம்.பி இறக்கி வைத்தார்,

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒன்றிய அரசு கொண்டு வந்த தொகுதி மறுசீரமைப்பு மசோதா தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் உரிமையை பறிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு எதிராகவும், வடஇந்திய மாநிலங்களுக்கு அதிகாரக் குவியலை அதிகரிக்கும் வகையிலும் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டிருந்தது என்றார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி. மணிமாறன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி நகர கழக செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி வெற்றியை கொண்டாடினர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சி.வி.எம். அண்ணாமலை

### ஏப்ரல் 20 (1997)



சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர்.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். கலைஞர் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத காலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார், அண்ணா அறிவித்த அறப்போராட்டங்களிலும் – தலைவர் கலைஞர் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறைப் பறவையாக விளங்கியவர்.

இயக்கக் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா, கலைஞர் ஆகியோர் நடத்திய நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**